1979 மார்ச் 15]

பாதுகாக்கமுடியும் என்ற காரணத்தால் இப்பொழுது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் மேற்கொண்டு இருக்கிற அணைகளைத் தகுந்த முறையிலே பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; பேரவைத் தலைவரவர்களே, மேற்கொண்டு அரசு பரிசீலனை செய்யும்.

தென்னாற்காடு மாவட்டத்தில் மரவள்ளி ஆலை

* வினா எண் 416—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம் மணிமுக்தா நீர்ப்பாசன திட்டப்பகுதியில் ஒரு மரவள்ளி ஆலை ஆரம்பிக்க அனுமதி கோரி மனு ஏதேனும் வந்திருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது ; (அ) ஆம். திரு. இளங்கோவன் என்பவர் மரவள்ளி ஆலை நிறுவ, மரவள்ளிக்கிழங்கு மாவு தயாரிக்க தொழில் வணிகத் துறையில் சிறு தொழிலாகப் பதிவு செய்ய விண்ணப்பித்து இருந்தார்.

(ஆ) தொழில் வணிகத்துறை அவருடைய நிறுவனத்தை சிறு தொழிலாக தற்காலிக முறையில் பதிவு செய்து சான்றிதழ் வழங்கியிருந்தது. அச்சான்றிதழ் 6-5-1978 உடன் காலாவதி யாகி விட்டது. அதைத் தொழில் முனைவோர் புதுப்பிக்க வில்லை.

எட்டயபுரம் மருத்துவ மனைக்கு புதிய கட்டடம்

* வினா எண் 417—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எட்டயபுரம் அரசினர் மருத்துவ மனைக்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் புதிய கட்டடம் கட்டும் வேலை எப்பொழுது துவங்கும் ?

மாண்புமிகு. திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ), மற்றும் (ஆ)—இல்லை.

[முற்பகல் 10–20]

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எட்டயபுரம் அரசினர் மருத்துவ மனைக்கு அடிஷனலாக பத்து படுக்கைகள் கொண்ட ஒரு கட்டிடம் கட்டுவதற்காக, பத் தாண்டுகளாக அதற்கு மதிப்பீடுகள் செய்ய வேண்டும் என்று போவதும் வருவதுமாக இருக்கிறார்களே தவிர கட்டிடம் கட்டு வதற்கான முயற்சிகள் இன்னும் ஏன் மேற்கொள்ள வில்லை. இந்தத் தொகுதியில் ஆளும் கட்சி உறுப்பினர் இல்லை. அதனால் தான் இதை செய்து முடிக்க அவரால் இயலவில்லை என்று சொல் கிறார்கள். இதை முக்கியமாக வற்புறுத்துவதற்கு காரணம், இங்கிருந்து சுமார் 20, 30 மைல்களுக்கு பெரிய ஆஸ்பத்திரிகள் வேறு எதுவும் இல்லை. ஆகவே இந்தக் கட்டிடம் கட்டும் வேலையை தயவு செய்து உடனடியாக முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, தற்பொழுது எட்டயபுரம் அரசு மருத்துவ மனையில் சிகிச்சைக்காக 6 படுக்கைகள் இருக்கின்றன. அங்கி இருந்து பத்து மைலுக்கு அப்பால் ஒரு பெரிய ஆஸ்பத்திரியிருக் கிறது. கோவில்பட்டியிலிருக்கிற இந்த ஆஸ்பத்திரி 40 படுக்கை கள் கொண்ட ஒரு பெரிய மருத்துவ மனையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் இங்கே மக்கள் தேவை என்று சொல்கிற வகையில் 10 படுக்கைகள் கொண்ட கட்டிடம் ஒன்றை கட்டுவதற்கு மாவட்ட மருத்துவ அதிகாரிகள் கருத்து தெரிவித் தார்கள். கட்டுவதற்கு வரைபடம் வேண்டும் என்றார்கள். வரைபடம் அனுப்பி வைக்கப்பட்டது. பத்து படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவ மனை கட்டிடம் கட்டுவதற்கு 3 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. சிறு அறுவைப்பிரிவு அறை, துணி துவைக்கும் அறை, சமையலறை போன்றவைகளுக்கு 6,600 ரூபாய், மருத்துவ உபகரணங்கள் போன்றவைகளுக்கு 12,000 ரூபாய் ஆகும். அதிகாரிகள் மற்றும் மருத்துவ மனை உத்தி யோகஸ்தர்களுக்கு சம்பளம் 16,228 மருந்துகளுக்காக 10,000 ரூபாய் ஆகும் என்றெல்லாம் கணக்கிடப்பட்டிருக்கிறது, இவை களுக்குத் தற்பொழுது நிதி வசதி இல்லை. நிதி வசதி நிலைமை சீரானவுடன் இதை பரிசீலித்து எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 மார்ச் 15]

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியிலிருக்கிற மருத்துவ மனை பெரியது என்றாலும் கூட அங்குள்ள 1 லட்சம் மக்களுக்கே அது போதுமானதாக இல்லை. இங்கிருந்து—அதாவது எட்டயபுரத்திலிருந்து 40 மைலுக்கு அப்பால் உள்ள தூத்துக்குடியில் ஆஸ்பத்திரி இருக்கிறது. 30 மைலுக்கு அப்பால் உள்ள அருப்புக்கோட்டையில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. ஆனால், சுற்றுப்புறத்தில் உள்ள கிராம மக்கள் 20 மைல்கள் அடங்கிய சுற்றுப்புறத்தில் உள்ளவர்கள் இந்த மருத்துவ மனைக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. ஆகவே இந்த ஆண்டில் முடியாவிட்டாலும் கூட வருகிற ஆண்டிலாவது இந்த மதிப்பீடுகள் முடிக்கப்பெற்று கட்டிடம் கட்ட ஆவன செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களை வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே. உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றிய மருத்துவ மனைகள்.

*வினா எண். 418— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிதி வசதியற்ற ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தும் மருத்துவ மனைகளை அரசே ஏற்று நடத்தும் திட்டமுண்டா?

(ஆ) ஒன்றியங்களிலிருந்து அவ்வாறான கோரிக்கைகள் வந்துள்ளனவா?

(இ) அந்த மருத்துவ மனைகளில் மருந்து கிடைப்பதில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர்.சௌந்திரராஜன்: (அ) உண்டு.

(ஆ) ஒன்றியங்களிலிருந்து பெறப்படும் இவ்விதக் கோரிக்கைகள் அரசின் விதிமுறைகளுக்கு ஏற்ப, அவ்வப்போது பரிசீலிக்கப்படுகின்றன.

(இ) தகவல் இல்லை. எனினும், மருந்துகள் வாங்க நிதி ஒதுக்கீடு இரட்டிக்கப்பட வேண்டுமென்று ஊராட்சி ஒன்றியங்களுக்கு அண்மையில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.